


# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 699.26 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கி கடன்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு திட்டங்களின் கீழ் 1597.59 கோடி ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு திட்டங்களின் கீழ் நலத் திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு நலத்திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையால் 1989–ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுத் திட்டம் பிற மாநிலங்களால் பின்பற்றப்பட்டு, ஏழை எளிய மகளிரின் வாழ்வாதார முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இதுவரை 7.22 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அக்குழுக்களில் சுமார் 1 கோடியே 6 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் மூலம் பெண்களின் பொருளாதார வளர்ச்சி மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டிற்காக வங்கிக் கடன்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஊரகப் பகுதிகளில் உள்ள 8,210 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தலா ரூ.15,000/– வீதம் 12.32 கோடி ரூபாய் சுழல் நிதி, 8,776 ஏழை எளிய நலிவுற்றவர்களுக்கு தலா ரூ.25,000/– வீதம் 10.97 கோடி ரூபாய் நலிவு நிலை குறைப்பு நிதி, சுய உதவிக் குழு ஒன்றுக்கு தலா ரூ.50,000/– வீதம் 13,255 குழுக்களுக்கு 66.28 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி, ஊரக மகளிரின் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்திட அவர்களின் வீடுகளில் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க ஊராட்சிக்கு 50 பயனாளிகள் வீதம் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கிட திட்டமிடப்பட்டு, இதுவரை 45,440 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். இன்றைய தினம் 1,54,560 நபர்கள் பயன் பெறும் விதமான உதவிகள் வழங்கப்படுகிறது.

கிராமப்புற மகளிரின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிடவும், கூடுதல் வருமானம் பெறவும் ஏதுவாக புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் 4.97 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட 1,663 கிராம ஊராட்சிகளில் இதுவரை 1,592 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டும், தற்போது மீதமுள்ள 3,936 நபர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஒரு ஊராட்சிக்கு மூன்று முதல் நான்கு பயனாளிகளுக்கு தலா 100 கோழிக்குஞ்சுகள் வழங்கப்படும்.

பால் உற்பத்தியை பெருக்குவதற்கு ஏதுவாக அசோலா

தீவன உற்பத்தி செய்திட 4,043 மகளிருக்கு 2.02 கோடி ரூபாய் நிதி, 186 ஆடு வளர்ப்பு வங்கிகள் அமைத்திட 1.86 கோடி ரூபாய் நிதி, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு குறைந்த கட்டணத்தில் கருவிகளை வாடகைக்கு வழங்கும் வேளாண் கருவிகள் வங்கி அமைக்க 1,427 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 9.61 கோடி ரூபாய் நிதி, தளவாடங்கள், சிறிய இயந்திரங்கள், அடிப்படை கட்டமைப்பு மற்றும் மூலதன நிதி போன்றவற்றிற்காக 3,000 வேளாண் உற்பத்தியாளர் குழுக்களுக்கு 4.82 கோடி ரூபாய் நிதி போன்ற திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர்களை குழுவாக ஒன்றிணைத்து உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உபரி விளைபொருட்களைத் திரட்டவும், 183 உற்பத்தியாளர் குழுக்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் 1.37 கோடி ரூபாய் திட்ட துவக்க நிதியும், நுண் தொழில் நிறுவன நிதியாக 569 பயனாளிகளுக்கு 1.99 கோடி ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது.

வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 10,714 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 464.16 கோடி ரூபாய் வங்கிக் கடன், 73 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 22.16 கோடி ரூபாய் வங்கி பெருங்கடன், 45 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறு தொழில் மேம்பாட்டு கடன் உத்தரவாத நிதியாக 5.24 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது.

நகர்ப்புறத்தில் உள்ள 590 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தலா ரூ.10,000/– வீதம் 59 இலட்சம் ரூபாய், 151 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 76 இலட்சம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் 985 நபர்களுக்கு 4.98 கோடி ரூபாய், 528 தொழில் குழுக்களுக்கு 23.36 கோடி ரூபாய், 76 ஒத்த விருப்பக் குழுக்களுக்கு 70 இலட்சம் ரூபாய், 1,470 சுய உதவிக் குழுக்களுக்கு 60.85 கோடி ரூபாய் மற்றும் 43 சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு 65 இலட்சம் ரூபாயும் தொழில் துவங்கிட வங்கிக் கடனாக வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தீன்தயாள் உபாத்யாய ஊரக திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் திறன் வளர்ப்பு பயிற்சி பெற்ற ஊரகப் பகுதியைச் சார்ந்த வேலைவாய்ப்பற்ற 50 இளைஞர்களுக்கு தனியார் தொழில் நிறுவனங்களில் பணிபுரிய பணி அமர்வு ஆணையினை வழங்கினார்.

ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் பாரம்பரிய மற்றும் அதிக வருமானம் தரும் தொழில்களில், அனுபவம் வாய்ந்த நபர்களைக் கொண்டு, இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தர 1,000 சமுதாய திறன் பள்ளிகள் துவங்கப்பட உள்ளது. அதில் இந்த நிதியாண்டில் 1,000 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,000 இளைஞர்களுக்கு வெல்டிங், எலெக்ட்ரிசியன், பிளம்பர், மண்பாண்டம், தையல், உணவு பதப்படுத்துதல், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல் போன்ற தொழில் திறன் பயிற்சிகள் வழங்கப்படும். இந்த சமுதாயத் திறன் பள்ளிகள் மூலம் 10 இளைஞர்கள் வரை ஒவ்வொரு ஊராட்சியிலும் பயன் பெறுவர். இவர்கள் அனைவரும் திறன் பயிற்சி பெறுவதற்கும், தொடர்ந்து தொழில் செய்வதற்கும் தேவையான உபகரணங்கள் அடங்கிய "தொழில் திறன் பயிற்சி பெட்டகம்" வழங்கப்படும். இன்று நடைபெறும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 23 மாவட்டங்களில் 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23 சமுதாய திறன் பள்ளிகள் துவங்கப்படுகின்றன.

உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களுக்கு வேளாண் மற்றும் கால்நடை வளர்ப்பில் உள்ள திறன் இடைவெளிகளைக் கண்டறிந்து, தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சிகளை வழங்கவும், உற்பத்தி செலவைக் குறைத்து, வருமானத்தைப் பெருக்குவதற்கும் உரிய பயிற்சிகள் வழங்கிட, 2000 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் துவங்கப்பட்டு, அதில் 74,000 உற்பத்தியாளர்களுக்கு மண், நிலத்தடி நீர் பரிசோதனை, இயற்கை உரம் பயன்பாடு, நுண்ணீர் பாசனம், ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சிக் கொல்லிகள் பயன்பாடு போன்ற பயிற்சிகள் வழங்கப்படும். இந்த சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் மூலம் 30 முதல் 50 உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு ஊராட்சியிலும் பயன் பெறுவர். இவர்கள் அனைவரும் பண்ணைப் பயிற்சி பெறுவதற்கும், தொடர்ந்து உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தேவையான உபகரணங்கள் அடங்கிய "பண்ணைப் பயிற்சி பெட்டகம்" ஒவ்வொரு சமுதாயப் பண்ணைப் பள்ளிக்கும் வழங்கப்படும். இன்று நடைபெறும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 23 மாவட்டங்களில் 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் துவங்கப்படுகின்றன.

இந்நலத்திட்டங்களின் துவக்க விழா நிகழ்வாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். தொடர்ந்து மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயனாளிகளுக்கு வங்கிக் கடன் உதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்க உள்ளனர்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (கிராமின்) மற்றும் ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 12,093 பயனாளிகளுக்கு 255.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவச தொகுப்பு வீடுகள், தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் கீழ் 167 பயனாளிகளுக்கு 55 இலட்சம் ரூபாள் மதிப்பீட்டில் தனிநபர் இல்லக் கழிவறைகள், 4.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92 சமூக சுகாதார வளாகங்கள், 1,293 பயனாளிகளுக்கு 4.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனிநபர் இல்ல குடிநீர் இணைப்புகள், 129.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் குடிநீர் இணைப்புகள் உள்ளிட்ட 2,217 பணிகள் மேற்கொள்வதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 208 பயனாளிகளுக்கு வேலை அட்டையும், 233 பயனாளிகளுக்கு 5.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆடு/மாடு

கொட்டகைகள் அமைத்தல், 24 பயனாளிகளுக்கு 1.22 கோடி ரூபாய் மதிப்பீட்டி தனிநபர் கிணறுகள் அமைத்தல், 31 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளுக்கு 7 இலட்சம் ரூபாய் நிலுவை ஊதியம், 39.96 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குளங்கள் மற்றும் வரத்து வாய்க்கால் தூர் வாருதல், திறந்தவெளி சமுதாய கிணறுகள் அமைத்தல், அங்கன்வாடி கட்டடங்கள் கட்டுதல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், மயான சுற்றுச்சுவர் கட்டுதல், சிறுபாலங்கள் அமைத்தல் மற்றும் தார்ச் சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட 411 திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் 862.22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 4,978 சாலைகள் மற்றும் சிறு பாலங்கள், 5.79 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 664 தெரு விளக்குகள், மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 14.13 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 96 பள்ளிக் கட்டிடங்கள் / சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள், ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 15–வது நிதிக்குழு மானியம் ஆகிய திட்டங்களின் கீழ் சிறு மின் விசைப்பம்பு அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், திறந்தவெளி கிணறு அமைத்தல், சமுதாயக் கூடம் அமைத்தல், சிறுபாலங்கள் / தரைப்பாலங்கள் அமைத்தல், சிமெண்ட் கான்கிரீட் / தார் சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட 4,024 திட்டப் பணிகள் 273.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நலத்திட்டங்களின் துவக்க விழா நிகழ்வாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 10 பயனாளிகளுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஊரக வளர்ச்சி முகமையின் பயன்பாட்டிற்கான வாகனங்கள் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 6-9-2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் தருமபுரி, நீலகிரி, தஞ்சாவூர், அரியலூர், கோயம்புத்தூர், திருவாரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர்கள் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்களின் பயன்பாட்டிற்காக 98 இலட்சத்து 91 ஆயிரத்து 162 ரூபாய் மதிப்பிலான 9 ஸ்கார்ப்பியோ வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 5 வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச்செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு.பிரவீன் பி.நாயர், இ.ஆ.ப. ஆகியோர் உள்ளனர்.

# தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், வத்தல் மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2116 பயனாளிகளுக்கு 16 கோடியே 47 இலட்சத்து 35 ஆயிரத்து 433 ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜி.கே.மணி, திரு. எஸ்.பி.வெங்கடேஷ்வரன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், வத்தல் மலையில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜி.கே.மணி, திரு. எஸ்.பி.வெங்கடேஷ்வரன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டம்








மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் **02.10.2021** அன்று மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பாப்பாபட்டி கிராமத்தில் உத்தமர் காந்தியடிகளின் **153**–வது பிறந்த நாளையொட்டி நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., பாப்பாபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சு. முருகானந்தம், துணைத்தலைவர் திருமதி த. லட்சுமி, செயலாளர் திரு. தங்கபாண்டி மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ.15 மலர் 23 இதழ் 7 நவம்பர் 2021

கௌரவ ஆசிரியர்கள்

திருமதி. **ம.பல்லவி பல்தேவ்,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தலைமை செயல் அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **ஜெ. இ. பத்மஜா,** இ.ஆ.ப.,
முதன்மை செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
**பா.செல்வராஜன்,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **சி. சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர்,
**ஜே. கணேஷ் கண்ணா,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **எஸ்.கவிதா,** கூடுதல் இயக்குநர்,
**நா.அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், (TNRTP)

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
**பெ.சதீஷ்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு
**ஸ்ரீ மூகாம்பிகை ஹைடெக் பிரிண்ட்ஸ்**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
'முற்றம்',
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412

**முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.**



## குறளும்-பொருளும்

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்;
அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய
அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

## உள்ளே...


| | |
|---|---|
| நவராத்திரி மற்றும் தீபாவளி 2021 சிறப்பு விற்பனை கண்காட்சி | 09 |
| கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயார் செய்தல் குறித்த ஆய்வுக் கூட்டம் | 12 |
| மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கான அறிவிப்புகள் | 13 |
| சுயஉதவிக்குழுக்களின் வெற்றிக் கதைகள் | 21 |
| தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் | 23 |
| மக்களைத் தேடி மருத்துவம் - முற்றக் கச்சேரி | 26 |
| தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் | 28 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 31 |


## twitter

“ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்கள் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர் கணக்கில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ”



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள்

**“நவராத்திரி மற்றும் தீபாவளி 2021 சிறப்பு விற்பனை கண்காட்சியினை”**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

திரு. **கேஆர். பெரிய கருப்பன்** அவர்கள் துவக்கி வைத்தார்.

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் நவராத்திரி மற்றும் தீபாவளி – 2021 சிறப்பு விற்பனைக் கண்காட்சியினை 01.10.2021 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன்







அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, விற்பனை அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் குறித்த விபரங்களை கேட்டறிந்தார்கள். இந்நிகழ்வினைத் தொடர்ந்து, முதியோர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் முதியோர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிக்கான காசோலைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். முன்னதாக முதியோர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். K. கோபால், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திருமதி. சி. சுஜாதா ஜேக்கப், திரு. ஜெ. கணேஷ் கண்ணா, திருமதி. எஸ். கவிதா, பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில், அமைக்கப்பட்டுள்ள 55 விற்பனை அரங்குகளில், சுமார் 122 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களான பட்டு,









பருத்தி ஆடைகள், கைவினைப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், பல்வேறு உலோகங்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், நவராத்திரி கொலு பொம்மைகள், வாசனைப் பொருட்கள், மரச் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள், கோரைப் பாய்கள், அனைவருக்கும் ஏற்ற தரமான ஆயத்த ஆடை வகைகள் மற்றும் பரிசு பொருட்கள் மற்றும் பூம்புகார் நிறுவனத்தின் தயாரிப்பு பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென 6 அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. மொத்தம் 61 அரங்குகள் இக்கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சி 2021 அக்டோபர் 01–ஆம் தேதி முதல் 31–ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெற்றது. கொரோனா பெருந்தொற்று காரணமாக தற்போது அரசின் உரிய வழிகாட்டி நெறிமுறைகளான தடுப்பூசி செலுத்தப்பட்டிருத்தல், முக கவசம் அணிதல், அடிக்கடி கைக்கழுவுதல், கிருமி நாசினி பயன்படுத்துதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் போன்றவற்றை கட்டாயம் கடைபிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

இத்தகைய சிறப்பு மிக்க விற்பனைக் கண்காட்சிக்கு ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து கண்காட்சியினைக் கண்டு களித்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த தரமான பொருட்களை வாங்கி மகிழ்ந்தனர்.









# கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயார் செய்தல் குறித்த ஆய்வுக் கூட்டம்




ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ்சிங் அவர்களின் தலைமையில் 2022–23ஆம் ஆண்டுக்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயார் செய்தல் குறித்த ஆய்வுக் கூட்டம் காணொலி மூலம் 30.09.2021 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை துணை அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் இக்காணொலி கூட்டத்தின் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'தமிழ்நாட்டில் கிராமப்புற வளர்ச்சிக்காகவும், ஊராட்சிகளின் சமூக, பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அயராது பணியாற்றி வருகின்றார். உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் ஊரகப் பகுதிகள் முழுமையான மற்றும் சமச்சீரான வளர்ச்சி பெறுவதற்கு உரிய உதவிகளை வழங்கி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேலும் சிறப்புடன் செயல்பட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டி வருகின்றார். அவரது ஒப்பற்ற, சீரிய தலைமையின் கீழ் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறை பணிகள் விரைவுபடுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

இக்காணொலி வாயிலான கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் சுய தொழில் மேற்கொள்ள தையல் இயந்திரம் வழங்குதல்



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளியவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக 04.10.2021 அன்று சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்த செல்வி. சரளா என்ற திருநங்கைக்கு சுயதொழில் தொடங்க ஏதுவாக தையல் இயந்திரம் ஒன்றினை வழங்கினார்.



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2021–22–ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலையறிக்கையில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அறிவித்த அறிவிப்புகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள் 24.08.2021 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கையின் போது, தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டிற்காக புதிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதன் விபரங்கள் வருமாறு.

**ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தனி நபர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் 84.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

தமிழகத்திலுள்ள சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாடு இவ்வரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். அதன் பொருட்டு, தனிநபர் பயன் பெறும் வகையில் 400 எண்ணிக்கையிலான பட்டுப்புழு வளர்ப்புக் கூடங்கள் 27.68 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 400 எண்ணிக்கையிலான காளான் வளர்ப்புக் கூடங்கள் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் 500 சுய உதவிக் குழுவினருக்கான பணிக்கூடங்கள் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலுமாக மொத்தம் 84.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2021–22 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

**சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாய அமைப்புகளை வலுப்படுத்த 188 கோடி ரூபாயில் சுழல் நிதி மற்றும் சமுதாய நிதி வழங்கப்படும்.**

ஊரகப் பகுதிகளில் 12,000 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களும், நகர்ப்புற பகுதிகளில் 20,000 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களும் அமைக்கப்படும்.



இக்குழுக்களுக்கு ஆதார நிதியாக ஊரக மகளிர் குழு ஒன்றுக்கு 15,000/– ரூபாய், நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழு ஒன்றுக்கு 10,000/– ரூபாய் வீதம் மொத்தம் 38 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும். இந்நிதியானது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு காப்பு நிதியாகவும், வங்கி மூலம் கடனுதவி பெற ஏதுவாகவும் அமையும். இத்தகைய நிதி உதவிகள் குழு உறுப்பினர்களுக்கு சிறு தொழில் துவக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கைகொடுக்கும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வாயிலாக பொருளாதார நடவடிக்கைகள் மூலம் வருமானத்தைப் பெருக்கிட 30,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் மொத்தம் 150 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்படும்.

**மகளிர் சுய உதவிக் குழுக்களின் நுண் மற்றும் குறுந் தொழில் நிறுவனங்களை பங்கு மூலதனம் மூலம் செம்மைப்படுத்தவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் 36 சிறு தொழில் தொகுப்புகளுக்கு 10.80 கோடி ரூபாய் நிதி மானியம் ஏற்படுத்தப்படும்.**

தொகுப்பு மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ் உற்பத்தி அலகுகள் துவங்க அதிகபட்சமாக 30 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் பெற்றுத் தர வழிவகை செய்யப்படும். இதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள், தேவையான நவீன தொழில் நுட்ப வசதி மற்றும் செயல்பாட்டு நிதி ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 36 சிறிய தொழில் தொகுப்புகளுக்கு 10.80 கோடி ரூபாய் நிதி மானியத்துடன் வங்கிக் கடன் இணைப்பு ஏற்படுத்தப்படும்.



**மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் உற்பத்தியாளர் குழுக்களின் மூலம் உற்பத்தி மற்றும் வருமானத்தினை அதிகரிக்க 100 சான்று பெற்ற விதை உற்பத்தி தொகுப்புகளுக்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கி ஊக்குவிக்கப்படும்.**

தரத்திற்கு உத்திரவாதம், இரகத் தூய்மை, நவீன முன்னோடி சந்தைகளை அணுகுதல், பயிர் வளர்ச்சி பருவத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குதல் ஆகிய பண்புகளை உட்புகுத்த உற்பத்தியாளர் குழுக்களுக்கு 100 விதை சான்று பண்ணைகள் அமைக்க, அலகு ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் 2 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். இவ்விதை சான்று பண்ணைகளில் அனைத்து பயிர்களின் விதைகளை உற்பத்தி செய்ய ஏதுவாக தமிழ்நாடு விதை சான்றளிப்புத் துறை மூலம் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகள் செய்யப்படும்.

**1,860 தனி நபர் மற்றும் 2,717 குழுத் தொழில் நிறுவனங்களை உருவாக்கவும், ஊரகத் தொழில் முனைவை ஏற்படுத்தவும் 51.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதி வழங்கப்படும்.**

ஊரகப் பகுதிகளில் விவசாயம் மற்றும் விவசாயம் சாரா தொழில்களை மேம்படுத்துவதற்காக உற்பத்தியாளர் குழு, தொழிற்குழு மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் 2,525 குழுத் தொழில் நிறுவனங்களுக்கு 26.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்க நிதி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 192 குழுத் தொழில் நிறுவனங்களுக்கு 4.50 கோடி ரூபாய் இணை மானிய நிதி உதவி வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள ஆர்வமுள்ள தனிநபர்களை தொழில் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் 1.860 தனிநபர் தொழில் நிறுவனங்களுக்கு 20.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணை மானிய நிதி உதவி வழங்கப்படும்.

**கிராமப்புறத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு போன்ற இணைத் தொழில்கள் 37 கோடி ரூபாய் மானியத்தில் 185 பண்ணைத் தொகுப்புகளாக ஒருங்கிணைக்கப்படும்.**

கிராமப்புறத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு போன்ற இணைத் தொழில்கள் ஒருங்கிணைக்கப்படும். இதனால் உற்பத்தி அதிகரிப்பு, பாதுகாப்பான சுற்றுச்சூழல், தரமான அங்கக விளைபொருட்கள் உற்பத்தி மற்றும் பயன்பாடு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை திட்டமிட்டு ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் (Integrated Farming Clusters) உருவாக்கப்பட்டு தொகுப்பு ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 185 ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் மொத்தம் 37 கோடி ரூபாய் மானியத்தில் உருவாக்கப்படும்.

**5,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 50 இயற்கை பண்ணைத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.**

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வண்ணம், இயற்கை உரம் மற்றும் பயிர் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இயற்கை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்திட 50 இயற்கை பண்ணைத் தொகுப்புகள் அமைக்க ஒரு தொகுப்புக்கு 6 லட்சம் ரூபாய் வீதம் 3 கோடி நிதி ஒதுக்கப்படும்.





**மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை உறுதி செய்ய இரண்டு இலட்சம் ஊட்டச் சத்துத் தோட்டங்கள் அமைக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இரண்டு இலட்சம் மகளிர் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தை உறுதி செய்திடவும், இரத்த சோகை குறைபாடுகளைச் சரி செய்திடவும் மகளிர் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் ஊட்டச்சத்துத் தோட்டம் அமைத்து இத்தோட்டத்தில், இயற்கை முறையில் பலன் தரும் சத்தான கீரைகள், முருங்கை, பப்பாளி, கொய்யா, சப்போட்டா போன்ற பழமரக் கன்றுகள் வளர்க்க 1 கோடி ரூபாய் நிதி மானியமாக வழங்கப்படும்.

**உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு மிக முக்கிய தேவையாக கருதப்படும் பொது உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட வாழ்வாதார பூங்காக்கள் உருவாக்கப்படும்.**

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடத் தேவையான பொது இடங்கள், கட்டிடங்கள் மற்றும் கருவிகள் / உபகரணங்கள் போன்றவை தேவையின் அடிப்படையில் பிற துறைகளின் ஒருங்கிணைப்புகள் மூலமாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். இப்பூங்காக்கள் மூலம் உற்பத்தியை பெருக்கும் நடவடிக்கைகளான இடவசதி, சேமிப்பு வசதி மற்றும் விற்பனைக்கு இணக்கமான சூழ்நிலை போன்றவை உருவாக்கப்படும்.

**இயற்கை வளங்கள் மற்றும் பல்லுயிர் பன்மத்தை பேணிக் காக்கவும், உள்ளூர் சுய உதவிக் குழு பெண்களுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.**

நமது அன்றாட தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றிற்கு நாம் பல்லுயிர் காரணிகளை சார்ந்தே வாழ வேண்டி உள்ளது. பல்லுயிர் பன்மம் (Biodiversity) என குறிப்பிடக் கூடிய இக்காரணிகளை பேணிப் பாதுகாப்பது நமது முதற்கண் கடமையாகும்.



பல்லுயிர் பன்மம் மற்றும் இயற்கை வளங்களை பேணிப் பாதுகாக்கும் வகையில் அனைத்து ஊராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு இதன் முக்கியத்துவத்தை விளக்கி பல்லுயிர் பன்மப் பதிவேட்டை (Resource Inventory Register) பராமரிக்க திறன் மேம்பாட்டுப் பயிற்சி 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

**கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 25,000 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அமைத்திடவும், தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு தேவையான திறன் பயிற்சிகள் அளிக்கவும் 87.80 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

கிராமப்புறங்களில் நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்த 18 வயது முதல் 35 வயது வரை உள்ள ஏழை இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திட தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 10,000 இளைஞர்களுக்கு 60 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக 10,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 10 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 16.50 கோடி ரூபாய் செலவில் 5,000 நகர்ப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு 130 வேலைவாய்ப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் 1.30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**31,900 ஊரக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொகுப்பு அடிப்படையில் மதிப்புக் கூட்டல் மேற்கொள்ள 1.86 கோடி ரூபாய் மதிப்பில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.**

சந்தை நுண்ணறிவு கிடைப்பதற்கும், தனி வணிக முத்திரை பெறுவதற்கும், நவீன வகையான பொட்டலமிட்டு விற்பனை செய்வதற்கும், அறிவுசார் தகவல்களை விளக்கமாக பெற 1,900 மகளிர் தொழில் முனைவோருக்கு 81 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். இதனால் தொழில் முனைவோர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அதிகபட்ச இலாபம் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

புதிய தொழில் நிறுவனங்கள் துவங்க, அடிப்படை தொழில் நுணுக்கங்களான மூலப் பொருட்கள் கொள்முதல் செய்து பாரம்பரிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மதிப்பு கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்து, புதிய விற்பனை உத்திகள் மூலம் வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான திறன் பயிற்சியை 30,000 குழு உறுப்பினர்களுக்கு வழங்க 1.05 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**ஊரகத் தொழில்களை மேம்படுத்திடவும், ஊரக மகளிர் தொழில் முனைவோருக்கு உரிய சேவைகள் வழங்கிடவும், 30 ஒரிட சேவை மையங்கள் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

ஊரகத் தொழில் நிறுவனங்களுக்கான நிதி சேவைகள், தொழில் நுட்ப உதவி, உரிமம் பெறுதல், வரி செலுத்துதல், தொழில் மேலாண்மைப் பயிற்சிகள், வியாபார உத்திகள் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான சேவைகள் வழங்கிடவும், ஊரக மகளிருக்கு தொழில் தொடங்குவதற்கும், தொடர்வதற்கும் திட்டப் பகுதிகளிலுள்ள 30 இடங்களில் ஒரிட சேவை மையங்கள் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு விற்பனையகம் அமைத்தல், தனி முத்திரை பெறுதல் (Branding) மற்றும் மின்னணு வர்த்தக இணைய தளம் உருவாக்குதல் (e-Marketing) போன்றவற்றிற்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படும்.**

ஊரக மற்றம் நகர்ப்புற பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இக்குழுக்களுக்குத் தரமான உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கவும், நவீன முறையில் பொட்டலமிடுதல் (Packaging) மற்றும் தனி முத்திரை அமைக்கவும் வழிவகை செய்யப்படும்.

மாநில, மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களை நவீனப்படுத்தி, புதுப்பொலிவுப் பெற்ற விற்பனையகங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு 1 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும்.

மின்னணு இணைய வர்த்தகம் மூலம் மகளிர் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை அதிகரிக்க மாநில அளவிலான வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகள்' வழங்கப்படும்.**




மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகள்' வழங்கிட 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட விபரங்கள் பெறுவதற்கு பிரத்தியேக தொலைபேசி உதவி சேவை மையம் துவக்கப்படும்.**

ஊரக மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான வாய்ப்புகள், நலத்திட்டங்கள். நிதி உதவிகள் குறித்த தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற பிரத்தியேக தொலைபேசி உதவி சேவை மையம் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்கள்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம்







தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், 07.09.2021 மற்றும் 08.09.2021 ஆகிய நாட்களில் சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# ‘சமூக நீதி நாள்’ உறுதிமொழி ஏற்பு





சாதிய ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளி, பெண்களை சமநிலையில் மதிக்கும் கொள்கைகளை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 17–ஆம் நாள் அன்று ஆண்டுதோறும் தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் ‘சமூக நீதி நாள்’ உறுதிமொழி எடுத்துக் கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், 17.09.2021 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில், ‘சமூக நீதி நாள்’ உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சர்வதேச முதியோர் தின கொண்டாட்டம்




தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள் வரவேற்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதியோர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மேலாண்மை இயக்குநர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கி, முதியோர்களின் வாழ்வில் வளம் சேர்க்கும் வகையில் அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், முதியோர் சுய உதவிக் குழுக்களுக்கு மகளிர் திட்டத்தின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், சுழல் நிதி மற்றும் கடனுதவிகள் குறித்தும் விரிவாக விளக்கிக் கூறினார்.

தொடர்ந்து திருவாரூர் மாவட்டம், விளாகம் கிராமத்தில் செயல்பட்டு வரும் சாவித்திரி புலே முதியோர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களுக்கு செயல் இயக்குநர் அவர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார்.

கடலூர் மாவட்டத்தில் செயல்படும் ஹெல்ப் ஏஜ் இந்தியா அமைப்பின் இயக்குநர் திரு. இளங்கோ ராஜரத்தினம் அவர்கள், முதியோர் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்தும், அவற்றிலிருந்து மீளும் வழிமுறைகள் குறித்தும் விளக்கினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட முதியோர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், சுய உதவிக் குழுவாக தாங்கள் இணைந்ததின் மூலம் பெற்ற நன்மைகள் குறித்து தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் திருமதி. ரா. ஜீவா மற்றும் அலுவலர்கள், முதியோர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிகள்




நாகப்பட்டிணம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் திருவிழா (லோன் மேளா) 15.09.2021 அன்று நடைபெற்றது.

நாகப்பட்டிணம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்று, 35 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய் கடன் உதவியும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் 5 தெருவோர வியாபாரிகளுக்கு சிறப்புக் கடனும் மற்றும் ஏழு நபர்களுக்கு தனிநபர் கடனும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டிணம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எஸ்.பி. பாலமுருகன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் இதர வங்கி மேலாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவர்கள் திரு. எஸ். சீனிவாசன், திரு. எஸ். மைக்கேல்ராஜ், சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வாடகை பாத்திரங்கள் மையம் மற்றும் தையல் அலகு துவக்க விழா

தென்காசி மாவட்டம், கணக்குப்பிள்ளை வலசை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் வாடகை பாத்திரங்கள் மையம் மற்றும் தையல் அலகினை தென்காசி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. குருநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது 30 உறுப்பினர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் பங்களிப்பு தொகை வழங்கி ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் வாடகை பாத்திர மையம் தொடங்கப்பட்டுள்ளது. 11 உறுப்பினர்களின் சொந்த தையல் இயந்திரங்களைக் கொண்டு தையல் அலகு தொடக்கப்பட்டுள்ளது.

மேலும் 50 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வீட்டுத் தோட்ட செடிக்கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




# வாழ்க்கையை வளமாக்கிய திட்டம்




தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் விழுப்புரம் மாவட்டம், தி.நல்லாளம் ஊராட்சியில் மலர்கள் முதியோர் சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவிற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் சுழல் நிதியாக 15,000/– ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. மலர்கள் முதியோர் குழு உறுப்பினர்களும் தங்கள் பங்குக்கு மாத சேமிப்பாக 50 ரூபாய் வீதம் செலுத்தி வருகின்றனர். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் பெறப்பட்ட சுழல் நிதி மற்றும் உறுப்பினர் சேமிப்பு தொகை இரண்டையும் உறுப்பினர்களுக்கு உள்கடனாக வழங்கபட்டு, கடன் திருப்பம் செய்யப்படுகிறது. இத்தொகையில், 5000 ரூபாய் கடனாகப் பெற்ற அமிர்தம் அம்மா என்பவர் தனது பகுதியில் பெட்டிக்கடை வைத்துள்ளார்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாய் தனது வாழ்வை நடத்த போதுமானதாக உள்ளது என்றும், வயதான தனக்கு வருவாய் ஈட்ட நல்ல வழிகாட்டிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு தனது நன்றிகளை அமிர்தம் அம்மா தெரிவித்துக் கொண்டார்.

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுயஉதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள்




## வாழ்வை வளமாக்கிய வெள்ளி கொலுசு தயாரிப்புத் தொழில்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. சுய தொழில் மேற்கொள்ளும் தொழில் முனைவோர்களாக உருமாற்றி, அத்தொழில்களில் நிபுணர்களாக்கி, இன்று தங்களைப் போன்ற ஏழை எளிய பெண்களை ஒன்று திரட்டி அவர்களையும் தங்கள் தொழில்களில் இணைத்துக் கொண்டு, வெற்றிகரமான தொழில் குழுக்களை உருவாக்கி நடத்தும் அளவிற்கு வழிகாட்டியுள்ளது. அப்படிப்பட்ட ஒரு ஏழை தொழில் முனைவோரான கவிதாவின் வெற்றிக் கதையை கேட்போம் வாருங்கள்.

“என்னுடைய பெயர் கவிதா (க/பெ. ராஜா) நான், சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியத்திலுள்ள மாங்குப்பை என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது கணவரின் சொற்ப வருவாயில் குடும்பத்தை நடத்தி வந்தேன். இந்நிலையில் எங்கள் ஊராட்சியில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஜான்சிராணி மகளிர் சுய உதவிக் குழுவில் நான் உறுப்பினராக இணைந்தேன்.

நான் எனது வறுமைச் சூழலை கருத்தில் கொண்டு எங்கள் கிராமத்தில் உள்ள வெள்ளி கால்கொலுசு செய்யும் பட்டறையில் கூலி வேலை செய்து வருவாய் ஈட்டி வந்தேன். எங்கள் கிராமத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்கள் குழுவிற்கு வாழ்வாதார மேம்பாட்டுக் கடனாக ரூ. 9 இலட்சம் வழங்கப்பட்டது. அத் தொகையில் இருந்து எனக்கு ரூ. 75 ஆயிரம் கடனாக வழங்கப்பட்டது. இத்தொகையை முதலீடாகக் கொண்டு, வெள்ளிக் கொலுசு செய்யும் சிறிய தொழிற்கூடத்தை எனது வீட்டிலேயே துவக்கினேன். நானும் என் கணவரும் இணைந்து வெள்ளிக் கொலுசுகளை தயாரித்து விற்பனை செய்து வருவதன் மூலம் நாளொன்றுக்கு ரூ. 1000/– வரை வருவாய் கிடைத்து வருகிறது.

எங்கள் குழு வங்கிய கடனை முறையாகத் திருப்பச் செலுத்தியதால், மீண்டும் வங்கியிலிருந்து ரூ. 10 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. அத்தொகையிலிருந்த கடன் பெற்ற எங்கள் குழுவைச் சேர்ந்த நான்கு பெண்களுக்கு வெள்ளிக் கொலுசு தயாரிக்கும் பட்டறைகளை வைக்க உதவியதுடன், வெள்ளி கொலுசு தயாரிப்பதற்கான ஆர்டர்களையும் பெற்றுத் தந்துள்ளேன். என்னைப் போன்ற பெண்களை தொழில் முனைவோராக உருவாக்கி வருகிறேன். எனது வளர்ச்சிக்கு காரணமான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கவிதா மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

## கருங்கோழி வளர்ப்பால் உயர்ந்த வாழ்வாதாரம்




என் பெயர் கலைச்செல்வி (க/பெ. சிவக்குமார்), திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி ஒன்றியம், மல்லகுண்டா ஊராட்சியில் வசித்து வரும் நான் எங்கள் பகுதியில் செயல்படும் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி மகளிர் சுய உதவிக் குழுவில் கடந்த 4 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வருகிறேன். சுய தொழில் மேற்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுவின் மூலம் வங்கிக் கடனாக ரூ.50,000/–மும், சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.50,000/–மும் மற்றும் எனது சொந்த பங்களிப்பும் சேர்த்து, கருங்கோழி வளர்ப்பு தொழிலை மேற்கொள்ள ஏதுவாக கொட்டகை அமைத்து கடந்த ஓராண்டாக கருங்கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகிறேன்.

கருங்கோழியானது கிலோ ஒன்றிற்கு ரூ.450/– வரை வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் கருங்கோழியின் ஒரு முட்டையானது ரூ.25/– வரை விற்கப்படுகிறது. இத்தொழிலின் மூலம் எனக்கு சராசரியாக மாதம் ரூ.15,000/– முதல் ரூ.20,000/– வரை வருவாய் கிடைக்கின்றது. சாதாரண கூலி வேலை செய்து கொண்டிருந்த நான் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்ததன் மூலம் இன்று ஒரு தொழில் முனைவோராக மாறியுள்ளேன். இதன் மூலம் எனது குடும்ப வருமானம் உயர்ந்து, வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனது உயர்விற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், சாமுண்டீஸ்வரி சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சாய்பாபா முதியோர் குழுவின் சாதனை கதை




விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியம், தொண்டூர் கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 24.09.2020 அன்று ஆரம்பிக்கப்பட்ட சாய்பாபா முதியோர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இக்குழுவினை தொண்டூர் கிராமத்தில் உள்ள 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோர் இணைந்து உருவாக்கியுள்ளனர். இக்குழுவில் மொத்தம் 10 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் தலா 200 ரூபாய் சேமித்து வருகின்றனர்.

இக்குழுவிற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 15,000/– ரூபாய் ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை இக்குழுவின் உறுப்பினர்களுக்கு சிறுகடனாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் யாருடைய தயவையும் நாடாமல் தங்களின் தேவைகளை இக்குழுவின் உறுப்பினர்கள் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

மாதாந்தோறும் நடைபெறும் குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு, உறுப்பினர்களின் தேவையை பொறுத்து உள்கடன் வழங்குதல், சேமிப்பு, சந்தா, கடன் திருப்பம் போன்றவை செலுத்தும் விவரம் பற்றி கலந்து பேசுகின்றனர். வயது முதிர்வின் காரணமாக தங்களை யாரும் கவனிப்பதில்லை என்ற கவலையில் இருந்த முதியோர்கள் குழுவாக இணைந்து செயல்படுவதின் வாயிலாக தங்களின் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இக்குழுவின் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

# துளசி மகளிர் குழுவின் ஜெராக்ஸ் மற்றும் இ-சேவை மையம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் பைரமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் அக்கொண்டப்பள்ளி கிராமத்தில் 12 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது துளசி மகளிர் குழு தற்பொழுது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் சார்பில் பைரமங்கலம் ஊராட்சியில் ஜெராக்ஸ் கடை வைப்பதற்கு திட்டமிட்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் அமுதசுரபி நிதியாக ரூ. 40,000/– பெற்று, ஜெராக்ஸ் மற்றும் இ–சேவை மையம் தொடங்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் ஜெராக்ஸ் மற்றும் இ–சேவை மையம் மந்த நிலை செயல்பட்டு வந்தது. எனவே ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கூட்டம், சுய உதவிக் குழு கூட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்க கூட்டம் ஆகியவற்றில் துளசி மகளிர் குழுவின் ஜெராக்ஸ் மற்றும் இ–சேவை மையம் பற்றி துண்டு பிரசுரங்கள் மூலம் தகவல் தெரியப்படுத்தப்பட்டது மேலும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் ஜெராக்ஸ் எடுத்து கொடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்த ஜெராக்ஸ் மற்றும் இ–சேவை மையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு ரூ.2000/–க்கு மேல் வருவாய் கிடைப்பதில், செலவுகள் போக நாளொன்றுக்கு ரூ.750/– வரை இலாபம் கிடைக்கப் பெறுகின்றது. தொழில் தொடங்குவதற்கு




தங்களுக்கு உறுதுணையாக இருந்த பைரமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றனர்.

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

# பாரத் மகிளா ஹேண்டி கிராஃப்ட் மகளிர் சுய உதவிக் குழு






கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுக்காவிற்குட்பட்ட ஹைகிரவுண்ட் பேரூராட்சிப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 12 நபர்கள் ஒன்றிணைந்து பாரத் மகிளா ஹேண்டி கிராப்ட் என்னும் மகளிர் சுய உதவிக் குழுவினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் துவங்கினர். தங்களது குழுவின் வெற்றி குறித்து குழுவின் உறுப்பினர்கள் கூறும் போது, “ஹைகிரவுண்ட் பகுதி இயற்கை எழிலும், செழிப்பான கடல் வளமும் கொண்ட பகுதி ஆகும். அத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலமாகவும் இப்பேரூராட்சி விளக்குகிறது.

எங்களது சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கடல் சிப்பிகளைக் கொண்டு கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சியினை பெற்று, அப்பயிற்சியின் மூலம் கடல் சிப்பிகளைக் கொண்டு பல்வேறு கைவினைப் பொருட்களை தயாரித்து பல்வேறு இடங்களில் விற்பனை செய்து வருகிறோம். மேலும் நாங்கள் கடல் சிப்பிகள் மூலம் கைவினைப் பொருட்களை உருவாக்கும் பயிற்சியினையும் அளித்து வருகிறோம். இதன் மூலம் கிடைக்கும் வருமானம் எங்கள் பிள்ளைகளின் படிப்பு செலவு, திருமண செலவு போன்றவற்றிற்கு உதவியாக இருக்கிறது.

வருமானத்திற்கு மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இருந்த நாங்கள் இப்பொழுது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சுய தொழில் மேற்கொண்டு, வருவாய் பெற்று எங்களது குடும்பம் நல்ல முறையில் வாழும் அளவிற்கு எங்களின் வாழ்க்கை தரம் உயர்ந்து உள்ளது.

இந்த அளவிற்கு எங்களது வாழ்க்கைத் தரம் உயர எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்’’ என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

# சுய தொழில் மூலம் வருவாய் பெற உதவிய இயக்கம்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, எமனேஸ்வரம், ஈஸ்வரன் கோவில் பகுதியில் செயல்பட்டுவரும் மங்கை மகளிர் சுய உதவிக் குழுவினரால் காட்டன் சேலை, பம்பர் பட்டு சேலை போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு மாவட்ட அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்கள் இணைந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். இக்குழுவின் மூலம் நாள் ஒன்றுக்கு 10 சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு அருகில் உள்ள கூட்டுறவு சங்கம் மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் பொருட்காட்சி மற்றும் விற்பனை கண்காட்சி மூலம் விற்பனை செய்யப்படுகிறது.




இத்தொழிலின் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.2,000/– வரை வருமானம் கிடைக்கின்றது. இக்குழுவினர் வாடகை கட்டிடத்தில் தங்கள் தொழிலை செய்து வருகின்றனர். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக பல்வேறு உதவிகள் பெற்று தொழிலில் நிரந்தர வளர்ச்சி அடைந்துள்ளனர். தாங்கள் வாங்கிய கடனையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர். தங்களுக்கு வங்கி கடன் பெற்றுத் தந்து, சுய தொழில் மேற்கொள்ளச் செய்து மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு மங்கை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வளத்தின் மணம் வீசும் மல்லிகை பத்திகள்

தேனி மாவட்டம், அல்லிநகரம் நகராட்சி, பொம்மையகவுண்டன்பட்டி, கட்டழகிரி தெருவில் அமைந்துள்ள சந்தோஷம் மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் வாசனைப் பத்திகள் தயாரிக்கப்பட்டு 'மல்லிகை பத்திகள்' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. குழுவில் உள்ள 12 உறுப்பினர்களில் உற்பத்திப் பிரிவில் 7 நபர்களும், விற்பனை மற்றும் சந்தைப் பிரிவில் 5 நபர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குழுவின் மூலம் நாள் ஒன்றிற்கு 500 பெட்டி வாசனைப் பத்திகள் உற்பத்தி செய்யப்பட்டு அருகிலுள்ள சில்லறை கடைகள் மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் பொருட்காட்சி மற்றும் விற்பனை கண்காட்சிகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

தங்களின் செயல்பாடுகள் குறித்து குழுவின் உறுப்பினர்கள் கூறுகையில், 'நாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். எங்கள் குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுழல் நிதி மானியமாக ரூ.10,000/– வழங்கப்பட்டது.

மேலும், எங்கள் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் யூனியன் வங்கியில் ரூ.3 இலட்சம் கடனுதவி கிடைக்கப் பெற்றது. இந்தத் தொகை எங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு




பெண்களின் குடும்ப முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியாக இருந்தது. இத்தொழிலில் இதர செலவினங்கள் போக நபர் ஒன்றுக்கு மாதந்தோறும் ரூ.7500/– வருமானம் கிடைக்கின்றது. நாங்கள் கடன் பெற்று சுய தொழில் மேற்கொள்ள பல்வேறு வழிகளிலும் தொடர்ந்து உதவி புரிந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

# வாழ்வாதாரத்தை வளமுள்ளதாய் மாற்றிய இயக்கம்




சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சி, முல்லைவாடி அடைக்கலம் தெருவில் வசித்து வரும் என் பெயர் சந்தோஷம் (க/பெ. கோவிந்தன்). இப்பகுதியில் செயல்பட்டு ஆதிசக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள நான் கடந்த 15 ஆண்டுகளாக எனது குடும்ப தொழிலான மண்பாண்டங்களைத் தயார் செய்து ஆத்தூர் நகராட்சி சாலையோரம் விற்பனை செய்து வருவதுடன், கெங்கவல்லி, தம்மம்பட்டி, நரசிங்கபுரம் போன்ற ஊர்களுக்கும் சென்று அங்கு நடைபெறும் வாரச்சந்தைகளிலும் விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் எனது குடும்பத்தை நடத்தி வந்தேன்.

இந்நிலையில் கொரானா காலக்கட்டத்தில் நான் உற்பத்தி செய்த மண்பாண்டங்களை விற்பனை செய்ய முடியாமல் இருந்தேன். இதனால் எனது தொழில் மிகவும் நலிவுற்று வருவாய் இல்லாமல் வறுமையில் வாடினேன். அப்போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், பாரத ஸ்டேட் வங்கியில் மாண்புமிகு பாரத பிரதமரின் தெருவோர வியாபாரிகளுக்கான (PM-SVANidhi) கடனுதவி திட்டத்தில் ரூ.10,000/– கடன் பெற்று அத்தொகையை மூலதனமாகக் கொண்டு, மீண்டும் எனது தொழிலைத் துவக்கினேன். தற்போது தினசரி ரூ.300/– முதல் ரூ.400 /– வரை வருமானம் கிடைக்கின்றது. இதன் மூலம் எனது வாழ்வாதாரம் வளமுள்ளதாக மாறியுள்ளது. வாங்கிய கடனையும் தவணை தவறாமல் திருப்பி செலுத்தி வருகிறேன்.

எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

# ராகி சோள உப்புமா

நாம் உண்ணும் உணவு நமக்கு வலைமையையும், ஆரோக்கியத்தையும் தருகிறது. நமது முன்னோர்கள் தங்களின் உடல் நலத்தைப் பேணவும், வலிமையுடன் இருக்கவும் சிறுதானிய உணவுகளையே உண்டு வந்துள்ளனர். இத்தகைய சிறுதானிய உணவுகளைப் பற்றி நாம் இப்பகுதியில் காணலாம்.

**புட்டு செய்ய தேவையான பொருட்கள் :**

ராகி மாவு – 50 கிராம், சோளம் – 50 கிராம், உப்பு – தேவையான அளவு, நல்லெண்ணெய் – 1 டீஸ்பூன், மிதமான சூட்டில் உள்ள தண்ணீர் – 50 மில்லி, துருவிய தேங்காய் – 3 டேபிள்ஸ்பூன்

**உப்புமா செய்ய தேவையான பொருட்கள் :**

பொடியாக நறுக்கிய பெரிய வெங்காயம் – 3 டேபிள் ஸ்பூன், பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் – 2, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, துருவிய இஞ்சி மற்றும் கடுகு தலா – 1 டீஸ்பூன், உப்பு – தேவையான அளவு, கறிவேப்பிலை – சிறிதளவு, எண்ணெய் – 2 டீஸ்பூன்



**செய்முறை:**

அடுப்பில் வாணலியை வைத்து சோளத்தைச் சேர்த்து வாசனை வரும் அளவு கருகாமல் வறுத்து ஆற வைக்கவும். இதை மிக்ஸியில் சேர்த்து பொடி செய்து வைக்கவும். ஒரு பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி, தண்ணீர், ஒரு டீஸ்பூன் எண்ணெய் விட்டு லேசாக சூடாக்கவும். சோள மாவு, ராகி மாவு, உப்பு, சேர்த்து, ஸ்பூனால் நன்கு கிளறி விடவும். மாவுக் கலவை தண்ணீர் பட்டு ஈரமாக இருக்க வேண்டும். மாவைப் பிசைய வேண்டாம். மாவை நாம் என்ன வடிவத்தில் வேண்டுமானாலும், பிடிக்கலாம் என்கிற பதத்துக்குக் கிளறி எடுக்க வேண்டும். இனி புட்டு ஸ்டீமரில் முதலில் ஒரு பங்கு துருவிய தேங்காய், மேலே ஒரு பங்கு புட்டு மாவு சேர்த்து மூடி போடவும். அடுப்பில் குக்கரை வைத்து தண்ணீர் ஊற்றி சூடாக்கவும். குக்கரை மூடி போட்டு விசில் போடும் இடத்தில் புட்டு ஸ்டீமரை வைத்து விடவும். குக்கரில் உள்ள தண்ணீர் சூடாக ஆரம்பிக்கும் போது தீயைக் குறைத்து பத்து நிமிடம் கழித்து புட்டு ஸ்டீமரை எடுத்துத் தனியாக வைக்கவும்.

**உப்புமா செய்ய:**

புட்டு ஸ்டீமரில் இருந்து புட்டை எடுத்து ஒரு தட்டில் போட்டு ஆற விடவும். அடுப்பில் கடாயை வைத்து இரண்டு டீஸ்பூன் எண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு சேர்த்துத் தாளிக்கவும். இதில் வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி சேர்த்து பச்சை வாசனை போக வதக்கி, வெங்காயம் வதங்கியதும் உப்பு சேர்த்து புட்டில் கொட்டி கிளறிப் பரிமாறவும். நாவிற்கு சுவையும், உடலுக்கு ஆரோக்கியமும் தரும் இந்த ராகி சோள உப்புமாவை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

**பயனுள்ள குறிப்புகள்**

- துணிகளில் பட்ட எண்ணெய் மற்றும் கிரீஸ் கரைகள் எளிதில் போகாது. இந்த கறைகளை போக்க, துணியில் சிறிது நீலகிரி தைலத்தை தேய்த்து கசக்கினால் கரை மறையும்.
- குளிர்ந்த நீரில் உப்பு கலந்து, அதில் காய்கறிகளை சில நிமிடங்கள் ஊற வைத்தால், அதிலிருக்கும் கிருமிகள் அழிந்துவிடும்.
- உங்கள் வீட்டு பாத்ரூமிலிருந்து அடிக்கடி கரப்பான் பூச்சிகள் வெளிவருகிறதா? அப்படியென்றால் இரவில் படுக்கும் போது பிளீச்சிங் பவுடரை போட்டு, கழிவறைகளை சுத்தம் செய்தால் கரப்பான் பூச்சி அண்டாது.
- ஷூக்களில் பூச்சிகள் புகுந்துவிடுவதால், அதனை அணியும் போது சில நேரங்கள் பூச்சிக்கடிக்கு ஆளாக நேரிடும். இதனை தவிர்க்க, ஷூக்களுக்குள் சிறிய கற்பூர துண்டினை போட்டு வைக்கலாம்.
- அசைவம் சமைத்த பாத்திரங்களில் ஒரு வித வாசனை வரும். அந்த வாசனை போக வேண்டுமானால் சிறிதளவு புளியை தேய்த்து, பின்னர் சோப்பில் கழுவ வேண்டும்.
- இட்லி மாவை இறுக்கமான பாத்திரங்களில் போட்டு மூடி வைத்தால், அவை விரைவில் புளிக்காது.
- இஞ்சியை ஓரிரு நாட்கள் பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், காய்ந்து போகும். இதனை வெள்ளை நிற ஈரத்துணியின் மேல் இஞ்சியை சுற்றி, தண்ணீர் பானையின் மேல் வைக்க வேண்டும்.

முற்றக் கச்சேரி 2.0

# மக்களைத் தேடி மருத்துவம்...

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்ட 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டம் குறித்து சுய உதவிக் குழுவின் ஊக்குனர் பாரதி, உறுப்பினர்களான கமலா மற்றும் தேவி ஆகியோர் உரையாடுகின்றனர்.

சுய உதவிக் குழுவின் அலுவலகத்தில் ஊக்குனர் பாரதி அமர்ந்திருக்கிறார். அங்கு வரும் குழுவின் உறுப்பினர்களான கமலா மற்றும் தேவி ஆகியோர் அருகில் உள்ள தண்ணீர் குழாயில் தங்களின் கை கால்களை கிருமிநாசினி கொண்டு நன்கு கழுவிவிட்டு அலுவலகத்தினுள் வருகின்றனர்.

பாரதி : வா... கமலா... வா... தேவி... எப்படி இருக்கீங்க ?

கமலா : நல்லா இருக்கோம் அக்கா... நீங்க எப்படி இருக்கீங்க அக்கா...

பாரதி : நான் நல்லா இருக்கேன்... 'மக்களைத் தேடி மருத்துவம்' அப்படிங்கற திட்டத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா ?

கமலா : மக்களைத் தேடி மருத்துவமா ? இது என்னக்கா புதுசா இருக்கு ?

பாரதி : நோயாளிகளின் வீட்டிற்கே சென்று மருத்துவம் பார்க்கும் திட்டத்தோட பெயர்தான் 'மக்களைத் தேடி மருத்துவம்'

கமலா : இது எப்பக்கா ஆரம்பிச்சாங்க... யாரு துவக்கி வைச்சாங்க...

பாரதி : நம்மலோட நலத்துல அக்கறை கொண்ட நம்ம முதலமைச்சர் அவர்கள்தான் இந்த திட்டத்தை துவக்கி வைச்சிருக்காரு. நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று மருத்துவம் பார்க்கறதாலே இந்தத் திட்டத்துக்கு 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற பெயரையும் அவர்தான் வைச்சிருக்காரு.

தேவி : இதால நமக்கு என்ன பயன் அக்கா... ?

பாரதி : நீரிழிவு, இரத்த அழுத்தம், சிறுநீரக நோய் உள்ளவர்கள் தொடர்ந்து மருத்துவ சிகிக்சை எடுத்துக் கொண்டு, மருந்து மாத்திரைகளை சாப்பிட வேண்டும். ஆனால் ஏழை மக்களால தொடர்ந்து மருத்துவமனைக்கு செல்ல முடியாது. அதோட வயசானவங்க, உடல் செயல் இழந்தவங்க மருத்துவமனைக்கு செல்ல மிகவும் சிரமப்படறாங்க. அவங்களுக்காகத் தான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கு. இந்தத் திட்டத்தின் மூலமா மருத்துவக் குழுவினர் நம்ம வீட்டுக்கே நேரடியா வந்து பரிசோதனைகளை செய்து, தேவையான மருத்துவ உதவிகளை செய்வாங்க...

தேவி : அட அப்படியா ? ரொம்ப நல்ல திட்டமா இருக்கே...

கமலா : என்ன வகையான மருத்துவ வசதிகள் கிடைக்கும் அக்கா ?

பாரதி : உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரக நோய், குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகள் போன்றவற்றுக்கெல்லாம் சிகிச்சை வசதிகள் கிடைக்கும். இயன்முறை சிகிச்சையும் வழங்கப்படும்.

தேவி : இந்த திட்டத்துல எப்படி நாம சேருவது அக்கா ?



பாரதி : இந்தத் திட்டத்தின் பணியாளர்கள் வீட்டுக்கே வந்து மருத்துவ பரிசோதனைகளை செய்வாங்க. நோயாளிகள் குறித்த விபரங்களை பதிவு செய்து, சிகிச்சை தந்து, தேவையான மருந்துகளைத் தருவாங்க.

தேவி : தொடர்ந்து மருத்துவ சிகிச்சை தருவாங்களா ?

பாரதி : ஆமா... குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை வீடுதேடி வந்து மருத்துவ சிகிச்சை தருவாங்க...

கமலா : அப்படியா ?

பாரதி : மேலும் சமுதாய நலப் பதிவேட்டுல ஒவ்வொரு நோயாளி குறித்த விபரங்களையும் பதிவு செய்து தொடர்ந்து கண்காணித்து வகைப்படுத்துவதும் இந்த திட்டத்தோட சிறப்பம்சமாகும்.

தேவி : இந்த 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்துல நம்ம சுய உதவிக் குழுவினரோட பங்களிப்பு ஏதாவது இருக்கா அக்கா... ?

பாரதி : கண்டிப்பா இருக்கு... நம்ம தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமா பயிற்சி பெற்ற பெண் சுகாதார தன்னார்வலர்கள், இடைநிலைச் சுகாதாரச் சேவையாளர்கள், இயன்முறை மருத்துவர்கள், நோய் ஆதரவுச் செவிலியர் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்வாங்க. பொது சுகாதாரத்துறையின் களப்பணியாளர்கள் இக்குழுவினரின் செயல்பாடுகளைக் கண்காணித்து வழிநடத்துவார்கள்.

தேவி : பரவாயில்லையே... நம்ம முதலமைச்சர் நமக்காக ரொம்ப நல்ல திட்டத்தை துவக்கி வைச்சிருக்காரு...

பாரதி : திட்டத்தை துவக்கி வைச்சது மட்டுமில்லாம... சில நோயாளிகளின் வீடுகளுக்கு நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியா சென்று அங்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதை பார்வையிட்டு, மருந்துகளைத் தந்திருக்காரு.

கமலா : அட ரொம்ப நல்லாயிருக்கே... வேற என்னவெல்லாம் இந்த திட்டத்துல இருக்கு அக்கா ?

பாரதி : ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்திற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறப்பாகக வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் ஈடுபடுத்தப்படும்.

கமலா : பரவாயில்லையே... இந்தத் திட்டத்தால எவ்வளவு பேர் பயனடைவாங்க அக்கா... ?

பாரதி : முதற்கட்டமாக இத்திட்டத்தின் மூலம் 30 இலட்சம் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கோடி பேருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க இலக்கு நிர்ணயிச்சிருக்காங்க. இந்த திட்டமானது ‘அனைவருக்கும் நலவாழ்வு’ என்ற உயரிய இலக்கை அடைய வழிவகுக்கும்.

கமலா : இந்த திட்டம் எந்த மாவட்டத்துல துவக்கி வைக்கப்பட்டது அக்கா... ?

பாரதி : இந்தத் திட்டத்தை நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் தொடக்கி வைச்சாரு. அதே நேரத்தில காணொலி காட்சி மூலமாக மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களிலும் துவக்கி வைக்கப்பட்டது.

கமலா : நம்ம மாநிலத்தை நோயற்ற மாநிலமா ஊரிலயும் முதியோர் சுய உதவிக் குழு அமைக்கலாம் அக்கா.

பாரதி : கண்டிப்பா அமைக்கலாம் சரியா...

கமலா : சரி அக்கா. நேரம் ஆயிடுச்சி... நாங்க கிளம்பறோம்... வரட்டா அக்கா...

பாரதி : பார்த்து போயிட்டு வாங்க...

தேவி, கமலா இருவரும் பாரதியிடம் விடைபெற்று செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)



## சர்வதேச மகளிர் தின விழா




நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சர்வதேச முதியோர் தினம் 01.10.2021 அன்று நீலகிரி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்தில் நடைபெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முதியோர் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த 42 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முதியோர் சுய உதவிக் குழு ஊக்குநர் பிரதிநிதிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், ஆரோக்கியம், சுகாதாரம் குறித்த விளக்கமும், எளிதாக செய்யக் கூடிய யோகாசனங்களும் முதியோர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், சாராஸ் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதியோர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



**மழைநீரை சேகரிப்போம் !**
**பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் !**
**சுற்றுச்சூழலை காப்போம் !**

# தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

## தகவல்களைக் கேட்டறிந்தோம் ! தொழில் வளத்திற்கு வழி வகுக்கிறோம் !




ஊரகத் தொழில் வளத்தில் முழு மூச்சாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், தனது முன்முயற்சித் திட்டங்களில் ஒன்றான, ஓர் இடச்சேவை மையத்தின் செயல்பாட்டின் மூலம் அந்த மாவட்டத்திலுள்ள அனைத்து தொழில் முனைவோருக்கும் தொழில் மற்றும் வணிக ரீதியான உதவிகளையும், விழிப்புணர்வுத் தகவல்களையும் வழங்கி, தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு வழி வகுக்க உள்ளது.

இதன் செயல்பாடுகளுக்காக கோயம்புத்தூரில் ஆகஸ்ட் 24–25, 2021 தேதிகளில், நிறுவன ட்ரீ (TREE) எனும் மும்பை நிறுவனத்தை சேர்ந்த 3 உறுப்பினர்கள் வருகை தந்து ஆய்வு நடத்தினர். இதன் முக்கிய நோக்கம், மாவட்டத்தில் உள்ள ஓர் இடச்சேவை மையத்தின் (OSF) வழிகாட்டுதல்களை வடிவமைப்பதாகும். இதற்காக மாவட்டத்தின் 4 வட்டாரங்களில் உள்ள 25 தொழில் முனைவோர்களை சந்தித்துப் பேசினர்.

மேலும், பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார் சமக்குளம், காரமடை மற்றும் அன்னூர் வட்டாரங்களில் உள்ள பொருள் உற்பத்தி நிறுவனங்கள், வாடிக்கையாளர் சேவை நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகிய பல்வேறு தொழில் நிறுவனங்களை பார்வையிட்டு தகவல்களை சேகரித்தனர்.

இதில் தொழில் முனைவோர் விவரங்கள், நிறுவனங்களின் வருமானம் – செலவு அளவுகள், சந்தைப்படுத்துதலுக்காக தொழில் நிறுவனர்கள் பெற்றுள்ள திறன்கள் மற்றும் விவரங்கள், இலாபப் பகிர்வின் விகிதங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான முதலீடு போன்றவற்றில் தொழில் நிறுவனர்களின் பங்களிப்பு குறித்து TREE நிறுவன வல்லுநர்கள் தகவல்களை சேகரித்தனர்.

மேலும் அந்தந்த நிறுவனங்களின் தொழில் முனைவோரிடம், தங்களின் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துவது தொடர்பான எதிர்கால திட்டங்கள் குறித்தும் இவர்கள் கேட்டறிந்தனர். இதன் அடிப்படையில் OSF மையத்தின் வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு உதவிகளும், சேவைகளும் வழங்கப்படும்.

## மகளிரின் திறன் வளர்க்கப்படுகிறது ! வளமான தொழில் வகுக்கப்படுகிறது !

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் (RSETI), 35 மகளிருக்கு, 30 நாட்கள் தையல் பயிற்சியை, 28 ஆகஸ்ட் 2021 முதல் துவங்கி நடத்தி வருகிறது. இப்பயிற்சி கிருஷ்ணகிரி மாவட்டம், பண்ணந்தூர் கிராமத்தில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் கட்டடத்தில் நடைபெற்று வருகிறது. இப்பயிற்சிக்காக மாவட்டப் பணியாளர்கள் காவேரிப்பட்டணம் வட்டாரத்திலிருந்து பங்கேற்பாளர்களை தேர்ந்தெடுத்தனர்.

இந்தப் பயிற்சியின் நிறைவில் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் மூலம் பயிற்சித் திறன் சான்று வழங்கப்படும். இந்த சான்றின் அடிப்படையில் பயிற்சி பெற்ற திறனாளர்கள் தொழில் குழுக்களாக உருவாக்கப்படுவர். இவர்களின் தொழில் முதலீட்டுக்கு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் நிதியுதவி வழங்கி ஊக்குவிக்கும். இதன் மூலம்




கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் வட்டாரத்தின் 35 மகளிர் தொழில் வளத்தில் மேம்படுகின்றனர் !

# வளமாகி வரும் கூட்டமைப்பு ! பலமாகி வரும் உற்பத்தி வளம் !

புதுக்கோட்டை



எங்கள் கீரனூர் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பை 2016–ஆம் ஆண்டு 163 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கினோம். இப்போது 600 பங்குதாரர்களையும், ஐந்து இயக்குநர்களையும் கொண்டு இந்த கூட்டமைப்பை நிர்வகித்து வருகின்றோம். எங்கள் கூட்டமைப்பின் வாயிலாக மரபுவழி நெல், தினை, நிலக்கடலை மற்றும் எள் பயிரிடும் உழவர்களுக்கு நாங்கள் உறுதுணையாய் இருந்து வருகின்றோம்.

அவர்களுக்கு இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சியைக் கொடுத்து, தொழில்நுட்ப ஒத்துழைப்பும் தருகின்றோம். உழவர்களின் வேளாண் செயல்பாடுகள் மற்றும் தரத்தைப் பொறுத்து அவர்களின் விளைபொருட்களுக்கான உண்மையான விலையை நிர்ணயித்து வழங்குகின்றோம். நாங்கள் எங்கள் கூட்டமைப்பு நிறுவனத்தில் எந்த வருமானம் பெற்றாலும் அவற்றை பங்குதாரரிடம் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றோம்.

கடந்த ஆண்டு கொரோனா பொதுமுடக்க காலத்தில், எங்களுக்கு தொழில் பாதிப்பு கடுமையாக இருந்தது. இந்த நிலையில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், எங்கள் கூட்டமைப்பிற்கு 10 லட்ச ரூபாய் நிதியுதவியை இரண்டு தவணைகளாக வழங்கியது. இந்த நிதியில் உழவுக்குத் தேவையான பல இயந்திரங்கள், உழவுக்கான மூலப் பொருட்கள், பாக்கெட் இடுவதற்கான பொருட்கள், பிராண்ட் லேபிள்கள், பாட்டில்கள், மூடி முத்திரையிடும் எந்திரம், சணல் பைகள் மற்றும் விளைப்பொருட்களை உலர்த்த சோலார் டிரையர் போன்றவற்றை வாங்கியுள்ளோம்.

எங்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த, எங்களது வர்த்தகச் சின்னமான 'தும்பை'க்காக ஒரு இணையதளத்தையும் (https://www.thumbaiagri.com/) உருவாக்கி உள்ளோம். இதில் அனைத்து வகையான பொருட்களின் விவரங்களையும் கொடுத்துள்ளோம். எங்களுடை உற்பத்தியாளர் கூட்டமைப்பை வளமானப் பாதையில் முன்னேற்றி வருகின்றோம்!

எம். கண்ணன்,
கீரனூர் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு,
நார்த்தாமலை ஊராட்சி, விராலிமலை வட்டாரம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

# மன நலமும் ! தொழில் வளமும் !

தொழிலில் கவனம் செலுத்தினால் உடலும் மனமும் சீர்படும் என்பது அனுபவமுள்ள வல்லுநர்களின் வழிகாட்டுதல். அந்த அற்புதமான ஒரு நல் முயற்சியை 'நலம்' காப்பகத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தியுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டாரம், கோவளத்தில் உள்ள பேன்யன் காப்பகத்தில் மசாலாப் பொடி தயாரிப்பதற்கான பயிற்சி வழங்கிட தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஏற்பாடு செய்திருந்தது.

ஆகஸ்ட் 21 ஆம் தேதி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 16 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். அதில் 10 பேர் மனநல பாதிப்புக்கு உள்ளானவர்கள். மீதமுள்ளவர்கள் 'நலம்' தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் ஆவர்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், இந்த 16 பேருக்கும் பயிற்சியளித்து, அதற்கான சான்றையும் வழங்கியுள்ளது. மேலும் இவர்கள் குழுவாக தொழில் துவங்கி நடத்திட, நிதியுதவியுடன் கூடிய வங்கிக் கடன் தொடர்புகளையும் ஏற்படுத்தி, நிறுவனக் குழுக்களாக அமைக்க உதவியது. மேலும், திருப்போரூர் வட்டாரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 'நலம்' பணியாளர்களுக்கு தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் (Marketing) மற்றும் நிறுவன அடையாளம் (Branding) செய்வதற்கான ஆதரவும் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் இந்தக் குழுவினர் தொழிலில் கவனம் செலுத்தி நலமான வாழ்வை முன்னெடுப்பர்!

செங்கல்பட்டு



# நிலை மாறும் பொழுதும்...
# நம்பிக்கை மாறாத திறனாளியாக இருக்கிறேன்!




என் பெயர் வெண்ணிலா, மாற்றுத் திறனாளியான எனக்கு எங்கள் ஊரில் வேலைவாய்ப்புகள் குறைவுதான். என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எங்கள் குடும்பத்தை நடத்தும் சுமையை நானும் பகிர்ந்து கொண்டு, குடும்பத்திற்காக கூடுதலாக சம்பாதிக்க விரும்பினேன். எனவே இந்த பெட்டிக் கடையை (Petty shop) 2019–ஆம் ஆண்டு தொடங்கினேன்.

எங்களுக்கு தொடர்ச்சியான வாடிக்கையாளர்கள் கிடைத்து கடையில் வியாபாரம் நன்றாகவே நடந்து கொண்டிருந்தது. கொரோனா பொதுமுடக்கத்தின் பொழுது வியாபாரம் தடைப்பட்டு மிகவும் சிரமத்திற்கு ஆளானோம். ஊரடங்கு நேரத்தில் சமாளித்தாலும், ஊரடங்கு முடிந்த பிறகு, கடைக்குத் தேவையான பொருட்களை வாங்க பணம் தேவை என்பதை உணர்ந்தேன்.

எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் உதவியோடு, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திலிருந்து 15,000/– ரூபாய் நிதியுதவி பெற்றேன். கடைக்குத் தேவையான குளிர்பெட்டி, பால், மசாலா பொடிகள், எண்ணெய், வெல்லம், உப்பு, பருப்பு போன்ற மளிகைப் பொருட்களை கொள்முதல் செய்து கடையில் வைத்தேன். இப்போது நாள்தோறும் 500/– ரூபாய் வருமானம் ஈட்டுகிறேன்.

இதனை வைத்துதான், என் கடன் தவணையை திருப்பிச் செலுத்தவும், சேமிக்கவும் வேண்டும். ஆனால் வணிகத்தை நடத்துவது என் தன்னம்பிக்கையையும் நினைவாற்றலையும் பெருக்கியுள்ளது. என் கடையிலுள்ள எந்த பொருளின் விலையையும் என்னால் சொல்ல முடியும். என் வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து, அனைத்து பொருட்களையும் இருப்பு வைக்கிறேன். என் கடை எனக்கு தன்னம்பிக்கையைத் தருகிறது!

**டி. வெண்ணிலா,**
உ. அம்மாப்பட்டி கிராமம்,
உத்தமபாளையம் வட்டாரம்,
தேனி மாவட்டம்.

# ஊர் மக்களின் வாகனங்களுக்கு உற்சாகம் தரும் சிறப்பான சேவை !

என் பெயர் மனோ, நான் கோயம்புத்தூரில் இரு சக்கர வாகன மெக்கானிக் மற்றும் வெல்டராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றினேன். கடந்த ஆண்டு கொரோனாவின் காரணமாக ஊரடங்கு அறிவித்தபொழுது, எனது சொந்த ஊருக்குத் திரும்பி வந்தேன்.

நான் திரும்பவும் கோவை சென்று பணியாற்ற விரும்பவில்லை. முந்தைய பணி அனுபவத்தால், ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையத்தில் (RSETI) கூடுதல் பயிற்சி பெற்றேன். அங்கு பயிற்சி பெற்ற பிறகு எனக்கு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திலிருந்து தொழில் முதலீட்டு நிதியாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கினார்கள். இந்தத் தொகையைக் கொண்டு எனது ஊரிலேயே சொந்தமாக வாகனப் பணிமனையைத் தொடங்கினேன்.

எனது மனையிலேயே ஒரு கொட்டகை அமைத்து வாகனங்களைப் பழுது நீக்கும் பணியினை செய்து வருகின்றேன். எனது பணிமனையில் வெல்டிங் மற்றும் டிரில்லிங் செய்ய பல்வேறு கருவிகளும், காற்றை பம்பிங் செய்ய கம்ப்ரஷர் எந்திரமும், நீர்சலவை (வாட்டர் வாஷ்) மற்றும் பைக் ஆட்டோ ஷாப்புக்குத் தேவையான மோட்டார்களும் வாங்கி வைத்துள்ளேன். என் சகோதரனும் என்னுடன் சேர்ந்து பணிமனையில் வேலைபார்த்து வருகிறார்.

எங்கள் ஊர் மற்றும் சுற்றியுள்ள 25 ஊர்களும் வாகனப் பணிமனைகளுக்குப் புகழ் பெற்றது.




ஏராளமான இரு சக்கர வாகனங்கள் பழுது நீக்குவதற்காக எங்களிடமும் வருகின்றன. ஆனால் அவற்றுக்கான உதிரிப் பாகங்களை மேலூரிலிருந்து 45 கிமீ தொலைவிலுள்ள மதுரை மாநகருக்கு சென்று வாங்கி வந்து, வாகனங்களின் பழுதை சரி செய்து வழங்குகின்றோம். எங்கள் பணிமனையின் வாயிலாக எங்களுக்கு மாத வருமானம் ரூ. 12,000/– முதல் ரூ.14,000/– வரை கிடைக்கின்றது. இது ஆரம்பகால வருமானம்தான், வருமானத்தை அதிகரிக்க தொழிலில் அதிக கவனம் செலுத்தி வருகின்றேன்!

டி. மனோ,
அகஸ்தீஸ்வரர் ஆட்டோ கடை,
கருங்குளம் ஊராட்சி, மேலூர் வட்டாரம், மதுரை மாவட்டம்.

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்
## ( ஊரக வளர்ச்சித் துறை )

திரு. **பிரவீன் பி. நாயர்,** இ.ஆ.ப., உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

**ஜி. முத்து மீனாள்** கூடுதல் இயக்குநர்

**ஆர். ரவிச்சந்திரன்** தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர்

# மல்லிகை சாகுபடி மற்றும் மலர் விற்பனை செய்தல்


இராமநாதபுரம்

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நொச்சியூரணி மற்றும் தங்கச்சிமடம் ஆகிய ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் மல்லிகை சாகுபடி மற்றும் மலர் விற்பனை கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் குறித்து கடந்த 07.09.2021 அன்று திருமதி. முத்து மீனாள் மற்றும் தகவல் (ம) தொழில்நுட்ப மேலாளர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் கள ஆய்வு செய்தனர்.

பயனாளிகள் ஒவ்வொருவரும் அதிகபட்சம் 1.5 ஏக்கர் வரை மலர் சாகுபடி மற்றும் தாய் செடியிலிருந்து பதியம் செய்து விற்பனை செய்கின்றனர். மேலும், ஒவ்வொரு நபரும் தலா ரூ.5 இலட்சம் முதல் ரூ. 6 இலட்சம் வரை விற்பனை செய்து இலாபம் ஈட்டி வருகின்றனர். தற்போது சாகுபடி செய்யும் மல்லிகை பூக்களை குறைந்தபட்சம் ஒரு கிலோ ரூ.600/– முதல் ரூ. 800/– வரை வியாபாரிகள் கொள்முதல் செய்து அதிகபட்சம் ரூ.1600/– வரை விற்பனை செய்கின்றனர். மேலும், தாய் செடியிலிருந்து பதியம் செய்யப்பட்ட செடி ஒன்றினை ரூ.2/–க்கு ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு வியாபாரிகள் மூலம் விற்பனை செய்து வருகின்றனர்.

கள ஆய்விற்கு பின் SMSSS தொண்டு நிறுவனத்தின் நிர்வாகிகள், தங்கச்சிமடம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் பயனாளிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, நேரடியாக மலர் விற்பனை செய்ய சந்தைப்படுத்துதலுக்கான வழிவகை மற்றும் பூக்கள் வாடாமல் பாதுகாக்க குளிர் சாதன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு இருந்தால் மேலும் அதிக இலாபம் ஈட்டுவதற்கு ஏதுவாக இருக்கும் என கலந்தாய்வில் கலந்து கொண்டோர் கூறினர்.





# மா கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை நாகை ஆர்கானிக் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனம்






நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த 2019–ஆம் ஆண்டு மா கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை நாகை ஆர்கானிக் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனம் என்ற பெயரில் 2852 பயன்பெறும் வகையில் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. அதன் செயல்பாடுகள் குறித்து கடந்த 06.09.2021 அன்று கூடுதல் இயக்குநர் திருமதி. முத்து மீனாள் மற்றும் தகவல் (ம) தொழில்நுட்ப மேலாளர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது கூடுதல் இயக்குநர் அவர்கள் தொழிற் சாலையிலுள்ள அனைத்து இயந்திரங்களையும் இயக்க செய்து அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதன் பிறகு கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின் (CCD) செயலாளர், தொழிற்சாலையின் தலைவர், செயலாளர், முதன்மை நிர்வாக அலுவலர், நிர்வாகிகள் மற்றும் பங்குதாரர்களுடன் வரும் மா பருவ காலத்தில் தொழிற்சாலையை செயல்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. பருவ காலம் தொடங்குவதற்கு முன்பு தொழிற்சாலையில் அன்னாச்சிப்பழத்தின் கூழ் தயாரிக்க தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு தொழிற்சாலையை இயக்க அறிவுறுத்தப்பட்டது.

மேலும், வரும் 25 செப்டம்பர் 2021–க்குள் அனைத்து பணிகளையும் முடித்து, தொழிற்சாலையை முழுவதுமாக இயக்கி, அதனை சார்ந்துள்ள விவசாயிகள் பயன் பெற வழிவகை செய்யப்பட வேண்டும் என கூடுதல் இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் (TNRTP) மூலம் ரூ.10 இலட்சம் கொரோனா நிவாரண நிதி பெறப்பட்டு மூலிகைப்பொடி தயாரித்து விற்பனை செய்து நல்ல இலாபம் ஈட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வருமானம் பெருக்கும் நடவடிக்கை மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளியின் வெற்றிக் கதை:

என்னுடைய பெயர் குப்பம்மாள், நான் செங்கல்பட்டு மாவட்டம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் முன்பு கீற்று முடையும் கூலி வேலைக்கு சென்று வந்தேன். எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வருமானத்தை பெருக்கும் நடவடிக்கை திட்டத்தின் கீழ் ரூ.20,000/– கடன் பெற்று இட்லி கடை வைத்து நல்ல வருமானம் ஈட்டி வருகிறேன். இந்த வருமானத்தை கொண்டு குடும்பத்தை நடத்துவதுடன், என் குழந்தைகளின் கல்வி செலவையும் மேற்கொண்டு வருகிறேன். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததை விட தற்போது எனது வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது. இதற்கு காரணமான தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



# புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன் வலை பின்னும் கூடத்தின் பயன்பாடு




புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சியில் சமுதாய உட்கட்டமைப்பு நிதியிலிருந்து ரூ.12.55 இலட்சத்தில் மீன் வலை பின்னும் கூடம் அமைத்து தரப்பட்டுள்ளது. இந்தக் கூடமானது மீனவர்கள் வலை பின்னுதல், வலைகளை சரி பார்த்தல், மீனவ சங்க கூட்டங்கள் நடத்துதல், மழை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில் பாதுகாப்பாக தங்கவும் மற்றும் கடலுக்குச் சென்று இரவு நேரங்களில் கரை திரும்பும் மீனவர்கள் ஒய்வெடுத்துச் செல்லவும் பெரிதும் பயன்படுகிறது. மேலும், மீனவர்கள் தங்களின் மீன்பிடி வலைகளை இக்கூடத்தில் பாதுகாப்பாக வைப்பதினால் அவர்களின் வலை நீண்ட காலத்திற்கு பயன்படுவதாக மீனவர்கள் கூறுகின்றனர்.

இந்நிதியின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 21 மீனவ கிராமங்களில் சூரிய ஒளி எரிசக்தி மின்சாரத்துடன் கூடிய மீன் வலை பின்னும் கூடம் ரூ.263.55 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து தரப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு






புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கடலோர வட்டாரங்களான மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவில் பகுதிகளில் வசிக்கும் மக்களின் முக்கிய தொழில்களில் ஒன்றாக கால்நடை வளர்ப்புத் தொழில் உள்ளது. கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஆடு வளர்ப்புத் தொழிலுக்கு குறைவான முதலீடு மற்றும் குறைவான மனித சக்தி மட்டுமே தேவைப்படும் என்பதால், பெரும்பாலான மீனவ குடும்பங்கள் இதை பகுதி நேர தொழிலாக செய்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் மேற்கொள்ளும் தொழிலில் குறிப்பிட்ட அளவிற்கு இலாபம் பெற முடியாத நிலை இருந்தது.

ஆடு வளர்ப்புத் தொழிலை முறைப்படுத்தி நவீன தொழில்நுட்ப பயிற்சி, பாரம்பரிய மூலிகை மருத்துவம், உணவு தானிய உற்பத்தி, அடர்தீவன உற்பத்தி, காப்பீடு மற்றும் சந்தைப்படுத்துதல், ஆட்டின் எடைக்கேற்ற விலை நிர்ணயம் போன்ற யுக்திகளை உள்ளடக்கிய பயிற்சிகள் மதுரை சேவா நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டதினால், கால்நடைகளின் இறப்பு விகிதம் 40 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக குறைந்துள்ளது. மேலும் காப்பீடு கட்டாயமாக்கப்பட்டு அனைத்து ஆடுகளும் காப்பீடு செய்யப்படுகிறது. அதுமட்டுமின்றி கால்நடை அடர்தீவன உற்பத்தி மையம் உருவாக்கப்பட்டு குறைந்த விலையில் தீவனம் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சிதோறும் 2 கால்நடை மருத்துவ தன்னார்வலர்கள் உருவாக்கப்பட்டு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். ஆடு வளர்ப்போரை ஒருங்கிணைத்து தலா 5 பேர் கொண்ட 41 கூட்டு பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, தலா ரூ.2 இலட்சம் வீதம் வணிக மேம்பாட்டு முகவராக ஒப்பந்தம் மேற்கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வங்கி கடன் பெற்று இத்தொழிலை செய்து வருகின்றனர். மேலும் கடலோர ஊராட்சிகளில் இத்தொழிலை செய்து வரும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை ஒன்றிணைத்து விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# கடலூர் மாவட்டம் கவரப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு







கடலூர் மாவட்டத்தில், கவரப்பட்டு, வடக்கு பிச்சாவரம், தெற்கு பிச்சாவரம், ஜெயங்கொண்டபட்டினம், நஞ்சை மகத்துவாழ்க்கை, நவாப்பேட்டை, குண்டுமேடு மற்றும் மடுவங்கரை ஆகிய எட்டு கிராமங்களிலுள்ள பால் உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒன்றிணைத்து 2016–ஆம் ஆண்டு 74 கூட்டு பொறுப்பு குழுக்களாக உருவாக்கி ''கவரப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு'' நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.40,000/– வீதம் சுமார் ரூ.1.48 கோடி வங்கி கடன் பெற்று, கறவை மாடுகள் கொள்முதல் செய்து இத்தொழிலை இலாபகரமாக செய்து வருகின்றனர்.

இக்கூட்டமைப்பின் மூலம் மாதம் ஒன்றிற்கு சராசரி 55,000 லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், கறவை மாடுகளுக்குத் தேவையான தீவனம் கூட்டமைப்பிலிருந்து அவர்கள் கிராமங்களில் குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டு வருகிறது. மேலும், இத்தொழிலை சிறப்பாக செயல்பட ஏதுவாக TNRTP மூலம் கோவிட் நிவாரண நிதியாக ரூ.10 இலட்சம் பெறப்பட்டு புதிய நான்கு சக்கர வாகனம் கொள்முதல் செய்து பால் உற்பத்தியாளர்களிடமிருந்து உரிய நேரத்தில் பால் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்தொழிலின் மூலம் ஒவ்வொரு நபரும் ரூ.4000/– முதல் ரூ. 6000/– வரை வருவாய் ஈட்டி வருகின்றனர். மேலும் வங்கிக் கடன் பெற்று, பால் குளிரூட்டும் அலகு அமைக்கப்பட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வழிவகை செய்யப்படவுள்ளது.

# நாகப்பட்டினம் மாவட்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் காய்கறி சாகுபடி



நாகப்பட்டினம் மாவட்டம், நாலுவேதபதி ஊராட்சியில் ஏழை குடும்பத்தை சேர்ந்த 5 நபர்கள் ஒன்றிணைந்து தென்றல் கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து, 17.02.2016ல் ரூ. 1,97,500/– கடன் பெற்று ஒவ்வொரு உறுப்பினரும் 1/2 ஏக்கர் நிலத்தில் காய்கறி சாகுபடி செய்து, பருவ நிலைக்கு தகுந்தாற்போல் காய்கறிகள், கீரை வகைகள், நிலக்கடலை போன்றவற்றை சாகுபடி செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கடனை முழுவதும் திரும்ப செலுத்தியதுடன் தங்களின் குடும்ப செலவினங்கள், குழந்தைகள் படிப்பு மற்றும் இதர செலவினங்களுக்கு இத்தொழில் மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து செலவு செய்து வருகின்றனர். இவர்கள் தவணை தவறாமல் கடன் திருப்பம் செய்ததமையால் மீண்டும் இத்தொழிலுக்காக ரூ.2.50 இலட்சம் இந்தியன் வங்கி மூலம் கடன் பெற்று காய்கறிகள் சாகுபடி செய்து, வேளாங்கண்ணியிலுள்ள பரவை சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (88,500 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,1 Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN